# தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-6.

## ந.க.எண். 056611/எம்/இ1/2021, நாள். 06.12.2021.

**பொருள்:** பள்ளிக்கல்வி – அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்தெடுப்பதற்கும் – நூலக பாடவேளைகளையும் மற்றும் பள்ளி நூலகங்கைளை முறையாகப் பயன்படுத்திடவும் அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:** அரசு கடித எண். 19562/பொ.நூ.2/2021-3, நாள் 03.11.2021.

*****

நூலகங்கள் மாணவர்களின் அறிவையும் ஆற்றலையும் பெருக்கும் பேராதாரமாகும். நாடு போற்றும் பெரிய தலைவர்கள் பாட நூல்களுக்கு அப்பால் தங்கள் பள்ளிகளில் உள்ள இருப்பிடங்களுக்கு அருகிலுள்ள நூலகங்களைச் சிறந்த முறையில் தொடர்ந்து பயன்படுத்தி உருவானவர்களாவர். மாணவர்களிடையே புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்தெடுப்பதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் பல்லாண்டு காலமாக நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன, ஒவ்வொரு வகுப்புக்கும் நூலகப் பாடவேளை வாரமொருமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பள்ளிகள் சிறப்பான முறையில் இப்பாட வேளையை செயல்படுத்தி வருகின்றன. எனினும், சில இடங்களில் நூலகப் பாட வேளை மற்றும் பள்ளி நூலகங்களின் பயன் முறையாக மாணவர்களைச் சென்றடையாமல் இருப்பது தெரியவருகிறது. எனவே, பள்ளி நூலகங்களையும் பாட வேளைகளையும் முறையாகப் பயன்படுத்தவும், அவற்றின் பயன் மாணவர்களை நன்கு சென்றடையவும் பாடநூல்களுக்கு வெளியே புத்தக வாசிப்பை ஒரு வாழ்வியல் முறையாக மாணவர்கள் கைகொள்வதை இலக்காகக் கொண்டு செயல்படவும் பார்வையில் கண்ட அரசுக் கடிதத்தில் அறிவுறுத்தியவாறு பின் வரும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படுகின்றன.

1. ஒவ்வொரு வகுப்புக்கும் வாரம் ஒருமுறை நூலகப் பாட வேளை இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
2. கூடுமானவரை தனி அறை ஒதுக்கீடு செய்து தேவையான மேசை, அலமாரி வசதிகளை ஏற்படுத்தி, புத்தகம் வழங்கல் பதிவேட்டைத் தயார் செய்து நூலகத்தினைப் பள்ளிகளில் செயல்பாட்டிற்கு உடனடியாகக் கொண்டுவர வேண்டும். இடப் பற்றாக்குறை உள்ள பள்ளிகளில், இருக்கும் வகுப்பறையிலேயே ஏதேனும் ஒரு வகுப்பறையை மேற்கண்ட செயல்பாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. பள்ளிகளில் தேவையான அளவு புத்தகங்கள் இல்லாத நிலை இருப்பின் மாவட்ட மைய நூலகத்தையோ, அருகிலுள்ள பிற நூலகங்களையோ அணுகி மாணவர்கள் வாசிப்பிற்குத் தகுந்த நூல்களைப் பெற்று மாணவர்களுக்கான நூலகச் செயல்பாடுகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

4. பெரும்பாலான பள்ளிகள் தங்களுக்குத் தேவையான தமிழ், ஆங்கில நாளிதழ்களை தற்போது வாங்கி வருகின்றன. நூலக நேரம் தவிர காலை, மாலை, உணவு இடைவேளை போன்ற நேரங்களில் மாணவர்கள் நாளிதழ்களை வாசிக்க ஏதுவாக நூலகம் திறந்து வைக்கப்பட வேண்டும்.

5. ஆர்வமும், விருப்பமும் உள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து இளம் வாசகர் வட்டத்தினை உருவாக்கலாம். பள்ளிக்கு அருகாமையிலுள்ள குழந்தை எழுத்தாளர்கள், கதை சொல்லிகள் போன்றோரை நூலகம் சார்ந்த செயல்பாடுகளுக்கென அழைக்கலாம். பள்ளி மேலாண்மைக்குழு, பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள், பெற்றோர், பொதுமக்கள் ஆகியோரிடம் புத்தக நன்கொடையை ஊக்குவிக்கலாம். வாசகர் வட்ட உறுப்பினர்களைக் கொண்டு பாட வேளைகள் தவிர பிற நேரங்களில் நூலகத்தை சுழற்சி முறையில் நிருவகிக்கச் செய்யலாம்.

6. ஒவ்வொரு வாரமும் நூலகப் பாட வேளையில் மாணவர்களைப் பள்ளி நூலகத்திற்கு அழைத்துச் சென்று ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு புத்தகத்தைக் கட்டாயம் வாசிக்கத் தர வேண்டும். மாணவர்கள் அப்புத்தகத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும். அடுத்தடுத்த வாரங்களில் புத்தகத்தை வாசித்து முடித்த மாணவனுக்கு வேறு புத்தகம் கட்டாயம் அளிக்க வேண்டும். நூலை மாணவன் வாசித்து முடிக்கவில்லை எனில் அதே புத்தகத்தை மீண்டும் வழங்கலாம்.

7. மேற்கூறிய நூல்கள் வழங்கும் பணியினை முடித்தவுடன் மாணவன் கடந்த வாரத்தில் தான் வீட்டிற்கு எடுத்துச் சென்று படித்த புத்தகம் குறித்து ஓவியம் வரையவோ, கட்டுரை எழுதவோ, கதைச் சுருக்கம் கூறவோ, திறனாய்வு செய்யவோ, நூல் அறிமுகம் செய்யவோ வேறு எந்தவிதமான சொந்தப் படைப்பாகவோ இருக்குமாறு ஒவ்வொரு மாணவனையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

8. அவ்வாறு வகுப்பு முழுவதும் மாணவர்களின் படைப்புகளை ஆய்வு செய்து மூன்று சிறந்த படைப்புகளை அவ்வாரத்திற்கான சிறந்த படைப்பாக அறிவித்து உற்சாகப்படுத்தலாம். இதுபோல ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு வாரமும் நூலகப் பாட வேளையில் மேற்குறிப்பிட்டவாறே செய்ய வேண்டும். இப்பணிகளைச் சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியர் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த வேண்டும்.

9. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மூன்று மாணவர்களைப் பரிந்துரைத்துப் பள்ளியிலுள்ள அனைத்து வகுப்புகளுக்கும் ஒருங்கே வாசிப்பு சார்ந்து போட்டிகளை இறுதி வாரத்தில் நடத்தி அப்போட்டியில் முதலில் வரும் மூன்று மாணவர்களின் பெயரை அந்தப் பள்ளிக்கான வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநரிடம் தலைமை ஆசிரியர் ஒப்படைக்க வேண்டும்.

10. வகுப்பறை அளவில் வெற்றி பெறாத மாணவர்களின் படைப்புகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு வகுப்பறையிலயே வைத்திருக்க வேண்டும். வட்டார / மாவட்ட / முதன்மைக் கல்வி அலுவலர் பள்ளிப் பார்வையின் போது இவ்வாறு தொகுக்கப்பட்ட படைப்புகளைப் பார்வையிட்டு மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாதமும் பள்ளியிலிருந்து வெவ்வேறு மாணவர்களை வட்டார அளவிலான போட்டிகளுக்கு அனுப்புவதன் வாயிலாக மாணவர்களிடையே பள்ளி அளவிலான போட்டியில் பங்குபெற உற்சாகப்படுத்த வேண்டும்.

11. பள்ளி வாரியாக தொகுக்கப்படும் பட்டியலில் உள்ள மாணவர்களுக்கு வட்டார அளவில் அடுத்த கட்டப் போட்டிகள் பிரதிமாதம் 10–ஆம் தேதிக்குள் நடத்தப்பட்டு அதில் தேர்வு செய்யப்பட்ட மூன்று மாணவர்கள் மாவட்ட அளவிலான போட்டிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

12. இதே முறையில் பிரதிமாதம் 20–ஆம் தேதிக்குள் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு மூன்று மாணவர்களைத் தேர்ந்தெடுத்து மாணவர்களுக்கும் அவர்தம் வகுப்பாசிரியர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாக சான்றிதழ் வழங்க வேண்டும்.

13. மாணவர்களுக்கு மட்டுமின்றி ஆசிரியர்களுக்கும் இதுபோலவே போட்டிகள் நடத்தலாம்.

14. மாவட்ட அளவில் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அனைவரும் மாத இறுதிக்குள் அருகிலுள்ள மாவட்ட மைய நூலகத்திற்கோ, பல்கலைக் கழக நூலகங்களுக்கோ, தஞ்சை சரபோஜி சரஸ்வதி நூலகத்திற்கோ, கன்னிமாரா, அண்ணா நூற்றாண்டு நூலகம் போன்று அந்தந்த மாவட்டங்களில் உள்ள சிறந்த நூலகங்களுக்கு நூலகப் பயணம் அழைத்துச் செல்லப்படுவர்.

15. மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற மாணவர்கள் பருவத்திற்கு ஒரு முறை மாநில அளவில் நடைபெறும் வாசித்தல் சார்ந்த உண்டு உறைவிட பயிற்சிப் பட்டறை மற்றும் போட்டிகளில் பங்கேற்க அழைக்கப்படுவர். இப்பயிற்சியில்

சிறந்த எழுத்தாளர்கள் பங்கு பெற்று எழுதுதல், வாசித்தல் குறித்து மாணவர்களின் திறனை மேலும் பட்டை தீட்டுவர்.

16. மாவட்ட அளவிலான நூலகச் சுற்றுலாவிற்கும் மாநில அளவிலான போட்டிகளில் மாணவர்களை பங்குபெற அழைத்து வருவதற்காகவும் ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின்கீழ் நிதி வழங்கப்படும். இதற்கென மாநிலத் திட்ட இயக்ககத்திலிருந்து தனியே அறிவுரைகள் வழங்கப்படும்.
17. மாநில அளவில் ஆண்டிற்கு மும்முறை நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும் முதல் 25 மாணவர்கள் மற்றும் ஒருசில ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்கும் அடுத்த 25 மாணவர்கள் மற்றும் ஒருசில ஆசிரியர்கள் இந்தியாவிலுள்ள தேசிய நூலகங்களுக்கும் 'அறிவுப் பயணம்' அழைத்துச் செல்லப்படுவர்.

நூலகம் என்னும் நண்பன் இருந்தால் அறிவு, ஆற்றல், பண்பு இவை எல்லாம் சிறக்கும், படைக்கும் ஆற்றல் பெருகும். பள்ளி நூலகங்களை செயல்பாடுகள் நிறைந்த துடிப்பான மையமாக்குவோம். வாருங்கள், அனைவரும் ஒன்றிணைந்து வாசிப்பை பேரியக்கம் ஆக்குவோம்!

எனவே, அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்தெடுப்பதற்கும், நூலக பாடவேளைகளையும் மற்றும் பள்ளி நூலகங்களை முறையாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்படுத்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6.12.21

**பள்ளிக்கல்வி ஆணையருக்காக**

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

**நகல்**

1. பொது நூலக இயக்குநர், (மு.கூ.பொ.)
அண்ணா சாலை, சென்னை-02.
2. அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள்.
3. அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக் கல்வித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-09. (தகவலுக்காக அனுப்பிவைக்கப்படுகிறது).